LIBRARY
14 MAR 1962
STATE LEGISLATURE, MADRAS

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

---

**Saturday, 19th August 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Harijan Trustees in temples*

* 1252 *Q.*—SRI P. ARASAN : *கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) தென்னார்க்காடு ஜில்லாவில், சிதம்பரம் தாலுகாவில் அறநிலையப் பாதுகாப்பு இலாகாவுக்குச் சம்பந்தமான கோவில்களில் எத்தனை கோவில்களில் ஹரிஜன தர்மகர்த்தாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?*

*(இ) எத்தனை கோவில்களில் ஹரிஜன தர்மகர்த்தாக்கள் நியமிக்கப்படவில்லை ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Eight.

(இ) Eighty-nine.

*Weavers' Co-operative Society, Chinnalapatti*

* 1253 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY : *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) மதுரை ஜில்லா, திண்டுக்கல் கூட்டுறவு சப்-ரெஜிஸ்ட்டிரார் 19-12-1960, 23-12-1960 தேதிகளில் ஏ. 2012 ஸ்ரீ முருகன் பட்டு அண்டு நூல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி அண்டு விற்பனை சங்கம், லிமிடெட், சின்னாளபட்டியை திடீரென்று பார்வையிட்டார்களா ?*

*(இ) 19-12-1960-ம் தேதி பார்வையிடப்போய் இருப்புத் தொகை சரிபார்க்க வேண்டுமென்று மேற்படி சங்கத் தலைவரிடம் கேட்டாரா ?*

*(உ) சங்கத் தலைவர் இருப்புத்தொகையை சரிபார்க்க அனுமதித்தாரா ?*

*(எ) அதில் இருப்புத் தொகை சரியாக இருந்ததா ?*

*(ஐ) இல்லையென்றால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார் ?*

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes. Sir.

(இ) Yes, Sir.

(உ) Yes. Sir.

(எ) No. Sir.

(ஐ) The matter is under investigation.

[19th August 1961

Sri K. VINAYAKAM : May I know the amount of cash that is missing from the cash counter?

The Hon. Sri R. VENKATARAMAN : About Rs. 900, Sir.

*Cattle-breeding*

*1254 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாடுகள் வளர்ச்சி திட்டத்துக்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பதுபற்றி அரசாங்கத்தினரால் பரிசீலனை நடத்தப்பட்டு வருகின்றதா ?

(இ) அப்படியானால், இந்நிலையம் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

(உ) மாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எந்தெந்த நாடுகளிலிருந்து உயர்ந்த ரகக் காளைகளும், பசுக்களும் இறக்குமதி செய்யப்படும் ?

(எ) இத்திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*d*) In the Third Five-Year Plan a sum of Rs. 10.00 lakhs has been provided for starting a Livestock Research Station in this State. The exact location of the Farm, the breeds of cattle to be imported for the Farm and other details have not yet been settled.

Sri P. G. MANICKAM : மேற்கண்ட திட்டமானது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எந்தெந்த இடங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி இனிதான் முடிவு செய்யவேண்டும்.

Sri A. VEDARATHNAM : இதுவரையில் நம்முடைய அனுபவத்தில் விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நல்ல ஜாதிப் பசு என்று எந்த ஜாதிப் பசுவைக் கண்டுபிடித்திருக்கிறீர்கள் ? அதை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட ஒரு ஜாதிப் பசு, ஒரு ஜாதி மாடு என்று சொல்வதற்கில்லை. இரண்டு மூன்று இனங்கள் தெற்கு மாவட்டங்களில் இருக்கின்றன. எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இனம் தகுதியாக இருக்கின்றனவோ அதற்குத் தகுந்தாற்போல் விருத்தி செய்யப்படும்.

Sri R. SRINIVASA IYER : ஒரத்தநாட்டிலே நடக்கும் ஆராய்ச்சியைத் தவிர வேறு எந்தத் திட்டமாவது இருக்கிறதா ? இந்தத் திட்டத்திலே கால்நடைகள் என்று சொல்வது மாடுகள் மாத்திரமா ? இதில் முக்கியமாக ரோமங்கள் உள்ள ஆடுகளின் வளர்ப்பை ஆராய்ச்சி செய்வதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா ?